**இலங்கை வங்கி** தீவளாவிய வலுவான கிளை வலையமைப்பையும் இலண்டனில் உள்ள துணை நிறுவனம் உட்பட பரந்தகன்ற வெளிநாட்டு வங்கி வலையமைப்பையும் கொண்டுள்ளதும் உலகளாவிய அதிசிறந்த 500 வங்கியியல் வர்த்தக நாமங்களுள் ஒன்றாகவும் இலங்கையின் ஆகச்சிறந்த வங்கியாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளதுமான இலங்கை வங்கி பின்வரும் பதவிக்குப் பொருத்தமான தகைமையும் ஆற்றலும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

# பயிலுநர் அபிவிருத்தி உதவியாளர்

*(மத்திய, கிழக்கு, வட, வட மத்திய, வடமேல், சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் மாத்திரமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன)*

## முக்கிய பொறுப்புகள்

**01. தயாரிப்பு ஊக்குவிப்பு மற்றும் வாடிக்கையாளர் அறிவூட்டல்**

சரியான இலக்குக் குழுக்களுக்கு நுண்கடன் தயாரிப்புகளை ஊக்குவிப்பதோடு வாடிக்கையாளருக்குப் பொருத்தமான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

**02. உறவு முகாமைத்துவம்**

கனிவான மற்றும் கவரும் விதமான பேச்சாற்றல் மூலம் வாடிக்கையாளர்களுடன் நெருக்கமான, நம்பிக்கையான உறவுகளைக் கட்டியெழுப்பலும் அதனைப் பேணலும்.

**03. வாடிக்கையாளர் தேவைகளை அடையாளம் காணல்**

வாடிக்கையாளரின் குறிப்பான தேவைகளை இனங்கண்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கு மிகவும் பொருத்தமான வங்கித் தயாரிப்புகளைப் பரிந்துரைத்தல்.

**04. கடன் மதிப்பீடு**

கடன் பற்றிய முடிவுகளை எடுப்பதற்கான தரவுகளைச் சேகரிக்க கள ஆய்வுகளை மேற்கொள்வதுடன், கிளை முகாமையாளருக்குப் பரிந்துரைகளை வழங்குவதற்காக விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தல்.

**05. நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு**

வாடிக்கையாளர் சேவையை எளிதாக்கும் வகையில் வங்கிக்கும் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இடையே ஒரு ஒருங்கிணைப்பாளராகச் செயலாற்றுதல்.

**06. கடன் மேற்பார்வை**

கடன் தொகைகளைக் கட்டம் கட்டமாக விடுவிப்பதற்குப் பரிந்துரைப்பதுடன், கடனாக வழங்கப்பட்ட பணம் சரியாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யக் கள ஆய்வுகளை மேற்கொள்ளல்.

**07. சந்தை பற்றிய விழிப்புணர்வு**

சாத்தியமான கொள்வனவாளர்கள் மத்தியில் சந்தை வாய்ப்புகள், கூட்டாண்மைகள் மற்றும் வாடிக்கையாளரின் இறுதித் தயாரிப்புகள் பற்றிய விழிப்புணர்வு என்பவற்றை இனங்காணுதல்.

**08. கடன் அறவீடு மற்றும் வைப்புத் திரட்டல்**

கடன் வாங்கியவர்களின் இடங்களுக்கு நேரடியாகச் சென்று கடன்களை அறவிட்டுச் சேகரிப்பதற்கு உதவுவதோடு அவர்களின் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கிராமிய வைப்புகளைத் திரட்டுதல்.

**09. களச் செயற்பாடுகள் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்**

வங்கியின் நெறிமுறைகளுக்கமைய தரவு சேகரித்தல், அறிக்கை சமர்ப்பித்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவதோடு கள ஆவணங்களையும் பேணுதல்.

**10. ஏனைய கடமைகள்**

கிளை முகாமையாளர் அறிவுறுத்தும் வேறு ஏதேனும் பணிகள் அல்லது களப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்.

## தகுதிப் பிரமாணங்கள்

- **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**
- **கல்வித் தகைமைகள்**

அரச கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து விவசாய பாடத்தில் ஆகக்குறைந்தது டிப்ளோமா கற்கைநெறியை (ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கான முழுநேரக் கற்கைநெறி) பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) கீழ் பதிவுசெய்யப்பட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் வழங்கப்படும் ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கான முழு நேர விவசாய டிப்ளோமா (NVQ 6 இற்கு சமமானது).

**அல்லது**

ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகள் குறித்த துறைசார் தொழில் அனுபவத்துடன் அரச கல்வி நிறுவனம் அல்லது மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) கீழ் பதிவுசெய்யப்பட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றிலிருந்து விவசாய பாடத்தில் ஆகக்குறைந்தது டிப்ளோமா கற்கைநெறியை (ஆகக்குறைந்தது ஒரு வருட முழுநேரக் கறகைநெறி) பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

- **செல்லுபடியான மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உரிமத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்**
- **ஏனைய திறன்கள்**
  - மற்றவர்களுடன் பழகும், தொடர்பாடும் திறன்களைக் கொண்டிருத்தல்.
  - அர்ப்பணிப்பையும், விடாமுயற்சியினையும் வெளிப்படுத்தும் திறனைக் கொண்டிருத்தல்.
  - நேர வரையறைகளுக்குள் செயற்படும் திறனைக் கொண்டிருத்தல்.
- **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 அல்லது அதற்குக் குறைந்த வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

## பொது

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகள் என்பதோடு அப்பயிற்சிக் காலப்பகுதிக்குரிய மாதாந்தக் கொடுப்பனவாக 1ஆம் வருடம் 60,000 ரூபாயும் 2ஆம் வருடம் 75,000 ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவியானது சாதாரண வங்கிச் சேவைக்கு அப்பாற்பட்டது (மூடிய சேவை) என்பதுடன் வங்கிச் சேவையின் பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- வங்கி திருப்தியடையும் வகையில் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யுமிடத்து விண்ணப்பதாரி அபிவிருத்தி உதவியாளர் - I தரத்தில் நிரந்தர ஆளணியில் (வங்கியியல் அல்லாத) உறுதிப்படுத்தப்படுவார்.
- வங்கியின் முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்பட்டாலன்றி, பயிலுநர் பணிக்கமர்த்தப்படும் மாகாணத்தில் ஆகக்குறைந்தது பத்து (10) ஆண்டுகள் (இரண்டு ஆண்டுகள் பயிற்சிக் காலம் உட்பட) கட்டாயம் பணியாற்ற வேண்டும்.

## தெரிவுசெய்யும் முறை

மேற்படி தகுதி அடிப்படைகளின்கீழ் பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர். மேற்படி ஏழு மாகாணங்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்.

## விண்ணப்பிக்கும் முறை

www.boc.lk என்ற எமது இணையத்தளத்தில்(ஊயசநநசள என்ற பகுதியின் கீழ்) பதிவிறக்கப்படக்கூடிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரியைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட உங்களுடைய சுயவிபரக் கோவையை

I. பிறப்புச் சான்றிதழ்

II. தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஆளடையாளத்தை எண்பிக்கும் சான்றுகள்

III. மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான செல்லுபடியான ஓட்டுநர் உரிமம்

IV. விவசாயடிப்ளோமோ (1 வருடம் அல்லது 2 வருடங்கள் - முழுநேரம்) தேர்ச்சிச் சான்றிதழ் மற்றும் பெறுபேற்றுத் தாள்கள் (Transcript).

V. தொழில் அனுபவத்திற்கான சான்றாவணம் (1 வருட டிப்ளோமோ முடித்தவர்களுக்கு மட்டும்)

VI. ஏனைய கல்வி / தொழிற் தகைமைகள்

ஆகிய ஆவணங்களின் நகல்களுடன் இணைத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2026.07.25 அன்று அல்லது அதற்கு முன்னர்கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் மாகாணத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

மேற்குறித்த முறை தவிர வேறு வழிகளில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

மத்திய, கிழக்கு, வட, வட மத்திய, வடமேல், சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் மாத்திரமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதோடு விண்ணப்பதாரி ஒரு மாகாணத்தை மாத்திரமே தெரிவுசெய்ய வேண்டும். மாகாணத் தெரிவு குறிப்பிடாத அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களைத் தெரிவுசெய்யும் விண்ணப்பதாரி தகுதிநீக்கம் செய்யப்படுவார்.

மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிவரை பெறுபேறுகள் கிடைக்காத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சான்றிதழ் உறுதிப்படுத்தலின்போது மேலே கோரப்பட்ட தகுதிப் பிரமாணங்களுக்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரி பதவிக்கு விண்ணப்பிக்கும்போது வங்கியின் வலைத்தளத்தின் “மனிதவள முகாமைத்துவ” பக்கத்தில் (https://www.boc.lk/hr-management) உள்ள “ஆட்சேர்ப்புக்கான தனிநபர் தரவுப் பாதுகாப்பு அறிவித்தல்” பகுதியை வாசித்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் அபிவிருத்தி)**
**மனிதவளச் செயற்பாடுகள் பிரிவு**
**இலங்கை வங்கி**
**தலைமை அலுவலகம்**
**கொழும்பு - 01**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பாக தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.
- தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க வங்கி உங்களது தகவல்களின் அந்தரங்கத்தையும் இரகசியத் தன்மையையும் பாதுகாக்கிறது.

1975 BOC CALL CENTRE
www.boc.lk
AA-(lka) Fitch Ratings, Brand Rating: AAA- (Brand Finance Lanka)
இலங்கை வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்